
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1318

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

77

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

*1953-ஆம் ஆண்டு, கலைஞரின் திரைக்கதை வசனத்தில் வெளிவந்த 'திரும்பிப்பார்' மற்றும் 1966-ஆம் ஆண்டு, 'அவன் பித்தனா?' ஆகிய திரைப்படங்கள் முழுக்க முழுக்க தொழிலாளி வர்க்க நலனைப் பேசிய திரைப்படங்கள். இன்னும் பல திரைப்படங்களிலும் கலைஞர், தொழிலாளர் நலன் மற்றும் தொழிலாளர் உரிமை குறித்துப் பேசியுள்ளார். அந்த வரிசையில், கலைஞரின் இறுதி மற்றும் 75-வது திரைப்படமான இளைஞன் (2011) முழுக்க முழுக்க தொழிலாளி வர்க்க விடுதலைக்கும் உரிமைக்கும், 8 மணி நேர வேலைக்கும் குரல்கொடுத்த திரைப்படமாக அமைந்தது.*

*புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான மாக்சிம் கார்க்கி-யின் 'தாய்' நாவலைத் தழுவி, கலைஞர் கவிதை வடிவில் 'தாய் காவியத்தை' எழுதி, அது (2004-இல்) புத்தகமாகவும் வெளி வந்துள்ளது. பிறகு, அவரே 'தாய்' நாவலைத் தழுவி கதை, திரைக்கதை, வசனத்தையும் எழுதித் திரைப்படமாக எடுக்கப்பட்டது, 'இளைஞன்'. பாட்டாளி வர்க்க இலக்கியமாகத் திகழும் 'தாய்' நாவலின்மீது அந்த அளவுக்கு ஈடுபாடு கொண்டிருந்தவர் கலைஞர் என்பது, இதன்மூலம் புலனாகிறது.*

*1917 -ஆம் ஆண்டு சோசலிசப் புரட்சிக்கு, முந்தைய ரஷ்ய நாட்டில் நிலவிய தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையை, 1955-ஆம் ஆண்டுக்கால தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்ப கலைஞர் மாற்றி, அதற்கேற்ப திரைக் கதையை எழுதியிருப்பார். எப்படியிருந்தாலும், 'வர்க்க ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் ஒழிந்து, சமதர்மம் மலர வேண்டும்' என்ற தனது விருப்பத்தையே கலைஞர் இத்திரைப்படத்தின் வாயிலாக வெளிப்படுத்தி இருப்பார்.*

**கதாநாயகன் கார்க்கி அறிமுகக் காட்சியில்...**

***கார்க்கி :*** *"பேச்சுக்கும் எழுத்துக்கும் ஒரு தனி சக்தி இருக்கு. பேச்சாலே ஒரு வரலாற்றையே திருப்பி எழுத முடியும். உலக அரங்கத்திலே ஒரு லெனின், ஒரு கார்ல் மார்க்ஸ், ஒரு பெரியார், ஒரு அண்ணா" என்று தொழிலாளர் மத்தியில் பேச்சைத் தொடங்குகிறான்.*

*மற்றொரு காட்சியில், கார்க்கியின் தந்தை ஆரோக்கியசாமியை எட்டி உதைக்கும் முதலாளி ராஜநாயகம் (சுமன்), "திமிரு, திறமை ரெண்டுமே அடக்கி ஆளுற எங்ககிட்ட தான் இருக்கணும். போய் ஒழுங்கா வேலையைப் பாரு, புரிஞ்சுதா போ" என்பான். அடுத்த காட்சியில், ராஜநாயகத்தின் மாளிகை வாசலில் நின்று, ஆரோக்கியசாமி ஆவேசமாக வந்து எதிர்க்குரல் கொடுப்பான். "என்னை மாதிரி ஏழை ஜனங்களோட உழைப்பைச் சுரண்டிப் பொழைக்கிற நீ, ஒரு ஓநாய்" என்று எதிர்க்கும்போது, ராஜநாயகத்தின் அடியாட்கள் ஆரோக்கியசாமியைத் தாக்குகின்றனர். தந்தை ஆரோக்கியசாமி இறந்த பிறகு, கார்க்கி தன் தந்தையின் அதே வேலைக்குச் செல்கிறான். அங்கு, அவனை வயதான ஒரு தொழிலாளி வரவேற்கிறார்.*

**தொழிலாளி:** *வா தம்பி வா... மொத மொத வேலைக்கு வந்திருக்க, இப்ப சங்கு ஊதும். அதுவும் கொஞ்ச நேரந்தான் ஊதும். அதுக்குள்ள கம்பெனிக்குள் போனாத்தான் வேலை. நீ உள்ள போறதுக்குள்ள பாதி எலும்பு முறிஞ்சுரும். மீதி எலும்ப அவய்ங்க முறிச்சுடுவாய்ங்க என்று சொல்கிறார்.*

*சங்கு ஒலிக்கிறது. தொழிலாளர்கள் முண்டியடித்துக்கொண்டு தொழிற்சாலையின் வாயிலை நோக்கி ஓடுகின்றனர். அப்போது,* **வயதான ஒரு தொழிலாளி (மணிவண்ணன்):** *"கரையை விரும்பும் அலை போலும், கடலுக்குத் திரும்பும் அலை போலும் ஒன்றையொன்று இடித்து மோதி, ஒரு கும்பல் உள்ளே நுழையும். மறு கும்பல் வெளியே வரும். மனித வயிறு மலத்தையும் ஜலத்தையும் சேமித்துவைத்துப் பின்னர், அதை பிதுக்கித் தள்ளுவதைப்போல் இந்தத் தொழிற்சாலையின் பானை வயிறு ஒரு கும்பலை வெளியேற்றும். இதைத்தான் மாக்சிம் கார்க்கி அன்னைக்கே சொன்னாரு" என்கிறார்.*

***மற்றொரு தொழிலாளி (நட்ராஜ்):*** *இந்த மாக்சிம் கார்க்கிங்கிறது யாரு?*

***மணிவண்ணன்:*** *ம்... உங்க மச்சான். ரஷ்யப் புரட்சியாளருங்க, அவரப் பத்தியெல்லாம் தெரிஞ்சிருந்தா, கேட்டுக்கு முன்னாடி இப்படி நாம ஏன் அடிச்சிக்கிறோம்? என்கிறார்.*

*இதேபோன்ற வசனங்களைப் பாட்டாளி வர்க்க விடுதலைக்காக, இத்திரைப்படம் முழுவதும் கலைஞர் எழுதியுள்ளதைக் காண்கிறோம். அதாவது, கலைஞரின் 'இளைஞன்' சமதர்மத்தைப் போதிக்கிறான் என்று சொல்லலாம் அல்லது 'ராஜகுமாரி' (1947) திரைப்படத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரத்துடன் தொடங்கிய கலைஞரின் திரைப்பயணம், இளைஞனில் சமதர்மத்தில் வந்து நிறைவடைந்தது என்று சொல்லலாம்.*

*ஆம், 1947-இல் தன் 23-வது வயதில், 'ராஜகுமாரி' திரைப்படத்திற்கு வசனம் எழுதத் தொடங்கிய கலைஞர் (2011), தன் 87-வது வயது வரை சுமார் 65 ஆண்டுக்காலம் தொடர்ந்து தமிழ்த்திரையில் தமது திராவிட இயக்கக் கொள்கைகளைத் திரைக்கதையாகவும் வசனங்களாகவும் 75 திரைப்படங்களுக்கு எழுதி, தமிழ்நாட்டு மக்களின் சிந்தனையில் அதனைப் புகுத்தி, மக்கள் மனங்களைப் பண்படுத்தி வந்திருப்பதைப் பார்க்கிறோம். அதாவது, தமிழ் மண்ணை 'திராவிட (பெரியார்) பூமி'யாக்கியதில் கலைஞரது திரைப்படங்களுக்கும் ஒரு பங்குள்ளது என்பதும் உண்மையாகும்.*

*மேலும், அவர் வசனம் எழுதிய ஒவ்வொரு திரைப்படத்தின் நெற்றியிலும் கலைஞரின் 'பராசக்தி', கலைஞரின் 'மந்திரிகுமாரி', கலைஞரின் 'ஒரேரத்தம்', ... கலைஞரின் 'இளைஞன்' என்று அவரை முன்னிறுத்தியே படத்திற்கு ஓர் அடையாளம் வழங்கப்பட்டு வந்திருப்பதையும் காண்கிறோம். இந்தப் பெருமை முத்தமிழறிஞர் கலைஞர் ஒருவரைத் தவிர, வேறு எந்த ஒரு வசனகர்த்தாவுக்கும் கிடையாது என்பதும் வரலாறாகும்.*

*எம்.ஜி.ஆர்., சிவாஜி, எஸ்.எஸ்.ஆர்., ஜெமினி கணேசன் என்று 1950, 1960-களின் முன்னணி கதாநாயகர்களது வளர்ச்சியில் கலைஞரின் பேனாவுக்கும் ஓர் இடம் உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். கலைஞர் திரையில் பேசாத சமூகப் பிரச்சினைகளே இல்லை என்பதே உண்மை. பகுத்தறிவு, பெண் விடுதலை, தமிழ் இன, மொழி உணர்வு, ஜாதி, தீண்டாமை ஒழிப்பு, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ எதிர்ப்பு, தொழிலாளி வர்க்க விடுதலை என அனைத்தையும் பற்றி கலைஞர் எழுதியுள்ளார் என்பதும், மறுக்கவியலாத உண்மையாகும். அவ்வுண்மையை 'திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி' எனும் இக்கட்டுரைத் தொடரை வாசிப்பவர்களால் உணர முடியும்.*

*இத்தொடரில், மொத்தம் 77 கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், 38 திரைப்படங்கள் பற்றி மட்டுமே எழுதப்பட்டுள்ளது. பல திரைப்படங்கள் காணக் கிடைக்காத காரணத்தால், இத்துடன் இத்தொடர் நிறைவு செய்யப்படுகிறது. 'இளைஞன்' திரைப்படத்தின் தொடக்கத்தில், 'கலைஞரின் இளைஞன்- 75' என்று குறிப்பிடப்படுவதை வைத்துக் கணக்கிட்டால், இன்னும் சரிபாதி திரைப்படங்கள் எழுதப்படாமல் மீதம் உள்ளன. காலமும் சூழலும் வாய்ப்பளித்தால், மீண்டும் தொடரலாம். நன்றி, வணக்கம்.*

**...முற்றும்**




## இறுதித் திரைக்கதையான காவியம்!



குமரன்தாஸ்

> **'ராஜகுமாரி' (1947) திரைப்படத்தில் பகுத்தறிவுப் பிரச்சாரத்துடன் தொடங்கிய கலைஞரின் திரைப்பயணம், இளைஞனில் சமதர்மத்தில் வந்து நிறைவடைந்தது!**

## வரலாற்றை ஆவணங்களில் தேடுங்கள்!

"தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றின் அருவருப்பான அசிங்கங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. வரலாற்றில் இடம் இருப்பவர்கள், வரலாற்றைப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். வரலாற்றில் இடம் இல்லாதவர்கள், அதனை அசிங்கப்படுத்தும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார்கள்'' என்று தனது எக்ஸ் தளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார், பத்திரிகையாளர் ஜெய்லானி.

நெருக்கடி நிலை எதிர்ப்பென்பது, ஓர் அரசியல் ஆளுமையின் வெளிப்பாடு. ஒன்றிய அரசின் செயல்பாடுகளை, பிரதமரின் பெயரை உச்சரித்த உடன் பாய்ந்து வந்து தடுப்பவர்களுக்கு, அந்த ஆளுமை பற்றித் தெரிந்திருக்க நியாயமில்லைதான்.

1975 -ஆம் ஆண்டு ஜூன் 25 அன்று நள்ளிரவு, நெருக்கடி நிலை அமல்படுத்தப்பட்டது. ஜூன் 27 அன்று தி.மு.க.வின் செயற்குழு கூடி, அதனைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றியது. இப்போது த.வெ.க. அரசின் Sappers and Miners ஆக இருக்கும் வைகோ Magna Carta of DMK என அந்தத் தீர்மானத்தைக் குறிப்பிடுவார். Magna Carta என்றால், என்ன என்பதைப் படிக்க முயலுங்கள், அந்தத் தீர்மானத்தின் வீச்சு புரியும்.

இந்தியா முழுக்க நெருக்கடிநிலை காலகட்டத்தை எதிர்த்தவர்கள், தலைமறைவாக இருக்கும் இடமாகத் தமிழ்நாடு இருந்தது. ஜார்ஜ் பெர்னாண்டஸ் போன்ற தலைவர்கள், தமிழ்நாட்டில் தங்கியிருந்தனர். 'தமிழ்நாட்டில் மட்டுமே சுதந்திரக்காற்று வீசுகிறது' என இ.எம்.எஸ். நம்பூதிரிபாட் பதிவுசெய்திருக்கிறார்.

'நீங்கள் நெருக்கடி நிலையை எதிர்க்காதீர்கள், பதவிக்காலத்திற்குப் பின்னரும் தேர்தலின்றி உங்கள் ஆட்சி நீடிக்கும்' என இந்திரா காந்தி கொடுத்த ஆஃபரை மறுதலித்து, நெருக்கடி நிலையைக் கடுமையாக எதிர்த்தார் கலைஞர். அதன் பரிசுதான் ஆட்சிக் கலைப்பு, தொடர்ந்து கட்சியினர் கைது. 'மிசா' காலத்தில் ஸ்டாலின் கைது பற்றி, ஏற்கெனவே பிரச்சினை கிளப்பியவர், மாஃபா பாண்டியராஜன். இப்போது அதனைப் பிரச்சினையாக்கியிருப்பவர், நிர்மல்குமார்.

த.வெ.க.வின் இந்தக் கருத்துருவாக்கம் நேற்றோ, இன்றோ தொடங்கியதில்லை. சில நாட்களுக்கு முன்பு, நான் நெறியாள்கை செய்த நிகழ்ச்சியில், த.வெ.க.வைச் சேர்ந்த ஒருவர் இதனைப் பேச முயன்றார். இதற்கு எந்த ஆதாரமும் இல்லை; வேண்டுமானால் இஸ்மாயில் கமிஷன் அறிக்கையைத் தருகிறேன், படிக்கிறீர்களா என்றேன். இல்லை, அதை விட்டுவிடலாம் என்றார். அந்த அசிங்கமான கருத்துருவாக்கம் சட்டப்பேரவைக்குச் சென்றிருக்கிறது. வரலாறு என்பது நடந்தது. ஆவணங்களிலும் ஆதாரங்களிலும் அது நிறைந்திருக்கிறது. பொதுக் கழிப்பறையில் கிறுக்கப்படும் அசிங்கமான கிசுகிசுக்களில் அதனைத் தேடாதீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



'தென்றல்' செல்வராஜ்



### பொள்ளாச்சி அழகாபுரி வீதியில்...

1983-ஆம் ஆண்டு, இளைஞர் அணிச் செயலாளராகத் தளபதியின் சுற்றுப்பயணம். பொள்ளாச்சி நகரில் உள்ள வி.எஸ்.ஆர்.ஏ பள்ளி அருகில் பொதுக்கூட்டம் முடிந்து, அழகாபுரி வீதியில் கழக முன்னோடி அன்வர்பாய் இல்லத்தில் உணவருந்திய பின், வெற்றிலை பாக்கு போட்டுக்கொண்டிருந்த தலைவரிடம், கழக இளைஞர் அணித் தோழர்கள் புகைப்படம் எடுக்க வந்து நின்றபோது, வெற்றிலையில் சுண்ணாம்பு தடவிய கையோடு, தளபதி அவர்கள் எழுந்து நின்றார்கள். காலத்தையும் நிகழ்வையும் தேக்கி வைத்துள்ள மறக்க முடியாத படம். படத்தில் என்னுடன் பொள்ளாச்சி மா.உமாபதி மற்றும் கழகத் தோழர்கள் இடம்பெற்றுள்ளனர்.

**- 'தென்றல்' செல்வராஜ்,**
**கழக சட்ட திட்டத் திருத்தக் குழு உறுப்பினர்,**
**பொள்ளாச்சி, கோவை மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மன்னை நாராயணசாமி கைது!

1963-இல் மதுரையில் நடைபெற்ற சட்ட எரிப்புப் போருக்கு, அறப்போர் வீரர்கள் அணிவகுத்துச் செல்ல, கலைஞர் என்.வி.நடராசன், மன்னை நாராயணசாமி ஆகியோர் பின்தொடர்ந்தனர். அப்போது, போலீஸார் மன்னை நாராயணசாமியை மட்டும் கைதுசெய்து, போலீஸ் வேனில் ஏற்றிச்சென்றனர். அறப்போர் நடைபெற்ற டிசம்பர் 16-ஆம் தேதிக்கு அடுத்த நாள்தான் கழகத்தின் இதர முன்னணியினர் கைதுசெய்யப்பட்டனர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900